# சிறுவர் அமுதம்

19.08.98

எண்ணம் .9

கிண்ணம் 8



சிறுவர் இலக்கிய மாத சஞ்சிகை

Kinder literarisches Magazin

## ஆட்டுக்குட்டி

ஆட்டுக்குட்டி எந்தன் குட்டி
அருமையான சின்னக்குட்டி
ஓட்டம் ஓடி வந்திடுவாய்!
எனக்கு முத்தம் தந்திடுவாய்!



தனக்குப் பிடித்த பாடலை எழுதி அனுப்பியிருக்கிறார் கிருத்திகா ரவீந்திரராஜா.

## சோக்கிரதீஸ்

கிரேக்க நாட்டின் தீர்க்கதரிசியான சோக்கிரடீஸ் தன் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு ஒருவன் வந்து அவரைத் தனியே அழைத்தான். சோக்கிரடீஸ் அவனிடம் சென்றார். அவன் அவரையும் அவரது நண்பர்களையும் ஒருதரம் நோட்டமிட்டான். பின் அவரிடம் "உங்களின் நண்பர் ஒருவரைப் பற்றிக் கேள்விப்பட்டேன். அதை உங்களிடம் சொல்ல வந்தேன்." என்றான்.

"நீ கூறப் போகின்ற விடயம் உண்மையானதா?" என்று அவனிடம் கேட்டார் சோக்கிரடீஸ். "உண்மை



என்று சொல்ல முடியாது. வேறொருவர் மூலமாகத் தான் விஷயத்தை அறிந்து கொண்டேன்." என்றான் வந்தவன். "நீ சொல்லவந்தது நல்ல செய்தி தானே?" என்றவருக்கு "இல்லை." என்று பதில் சொன்னான் வந்தவன். "அந்தச் செய்தி கட்டாயம் எனக்குச் சொல்லியேயாக வேண்டுமா?" கேட்டார் சோக்கிரடீஸ். "தேவையில்லை." என்றான் வந்தவன்.

"நீ சொல்ல வந்த விஷயம் உண்மையானதும் இல்லை. நல்ல விஷயமும் இல்லை. அவசியமானதும் இல்லை. ஆனபடியால் இந்த விஷயத்தை இப்பொழுது பேச வேண்டியதில்லை என்று நான் நினைக்கிறேன். நீ போய் வா." என்றார் சோக்கிரடீஸ்.

□□□□□□□□□□□□□□□□□□□□□□

# சங்கீதமும் ஞானமும்

நாராயணன் மிகவும் பிரபலமான சங்கீத வித்துவான். ஒவ்வொரு நாளும் அவன் தன் வீட்டுத் திண்ணையில் இருந்து பாடல் பயிற்சி



செய்வது வழக்கம். அந்த ஊரில் உள்ளவர்கள் அவன் பாடல்களை இரசிப்பதற்காக, அவன் வீட்டின் முன்னால் கூடுவார்கள்.

அன்றும் நாராயணனின் சங்கீதத்தைப் பார்த்துக் கேட்டு, இரசித்துக் கொண்டு இருந்தார்கள் ஊர் மக்கள். அப்போது, ஆட்டு மந்தைகளை ஓட்டிச் சென்று கொண்டிருந்த மனிதன் ஒருவன் சிறிது நேரம் நாராயணன் பாடுவதைக் கேட்டான். பின்பு தேம்பித் தேம்பி அழுதான். அவன் அழுவதைக் கண்ட ஊர் மக்கள், அவன் சங்கீதத்தைக் கேட்டு உருகி ஆனந்தக் கண்ணீர் விடுவதாக எண்ணினார்கள்.

தொடர்ந்து அவன் தேம்பித் தேம்பி அழுவதைப் பார்த்ததும், அருகில் இருந்தவர்கள், "ஏன் அழுகின்றாய்?" என்று கேட்டார்கள். அதற்கு அவன், "ஐயோ! நேற்றுத்தான் என் ஆடுகளில் ஒன்று இப்படிக் கத்திக்கத்தி வலிப்பு வந்து இறந்து விட்டது. அது போல இந்தத் தம்பியும் இறந்து விடப் போகின்றானே! அதனால் தான் அழுகின்றேன்" என்றான்.

உடனே ஊர்மக்கள் "இங்கே நின்றால் உனக்குத்தான் வலிப்பு வந்து விடும். அடி வாங்கிச் சாகாமல் ஓடி விடு." என்று அவனை விரட்டினார்கள்.

## மகாபாரதம்

பாண்டவர்கள் வாரணாவதத்தில் அரசமைத்தார்கள். அயல் நாட்டு மன்னவர்களையும் அடி பணிய வைத்து ஆட்சி செலுத்தினர். நன்றாகத் தேர்ச்சி பெற்றவனும், பெரியப்பா திருதராஷ்டிரனின் நம்பிக்கைக்குப் பாத்திரமான புரோசனன் என்னும் மந்திரி மேற்பார்வையில் பெரிய மாளிகை கட்டிக் கொடுக்கப் பட்டிருந்தது. மாளிகையின் பல இடங்களிலும் மெழுகினால் வார்த்து அழகு படுத்தப்பட்டும் இருந்தது பாண்டவருக்குச் சந்தேகத்தை வரவழைத்தது. இதனால் தங்களுக்குத் தநத உணவு, தானியங்கள் உடைகள் எல்லாவற்றையும் ஊன்றிக் கவனித்து வந்தனர்.

ஆனாலும் தாங்கள் சந்தேகம் கொண்டிருப்பதை மற்றவர்களின் முன்னால் காட்டிக் கொள்ளாமல் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் வீமன் தனித்திருந்த வேளையில், மாளிகையில் மரவேலை செய்யும் ஒருவன் அவனிடம் வந்தான். அவனை வீமன் "என்ன விஷயமாக வந்தாய்?" என்று விசாரித்தான். அவன், "அரசகுமாரா! இங்கு நடந்த இரகசியமொன்றை உங்களைத் தனிமையில் சந்திக்கும்போது கூறும்படி

தங்களின் சிறியதந்தையாகிய விதுரர் என்னிடம் சொல்லி இருந்தார். அதைச் சொல்லவே, நீங்கள் தனிமையில் இருக்கும் இவ்வேளையில் வந்தேன்." என்றான்.

வீமனும் விபரத்தைச் சொல்லும்படி அவனிடம் கேட்டான். அவன் "மந்திரியான புரோசனன் கௌரவர்களிடம் மிகவும் பற்றுக் கொண்டவர் என்பதை நீங்கள் அறிவீர்கள். அவர் நல்ல எண்ணத்தோடு தங்களுக்கு எதையும் செய்ய மாட்டார் என்பதில் விதுரருக்குச் சந்தேகம் ஏற்பட்டது. அதனால் வேலையாட்களோடு வேலையாளாக என்னையும், நம்பிக்கைக்குரிய சிலரையும் இங்கு அனுப்பினார். சமயம் பார்த்திருந்து இந்த மாளிகைக்குத் தீ வைப்பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றது. இது இங்கு வந்த சிலநாட்களில் எனக்குத் தெரியும்.

நானும் என்னுடன் வந்த வேலையாட்களும் சேர்ந்து சுரங்கப்பாதை ஒன்று அமைத்திருக்கிறோம். பாண்டவருள் உடல்பலத்தால் கூடியவர் நீங்கள், நில மண்டபத்துக்குச் செல்லும் பாதையில் அழகிய தூண் ஒன்றை மென்மையான, பலம் குறைந்த மரத்தினால் செய்திருக்கின்றேன். அதை நகர்த்த உங்களால் முடியும். அதன் கீழே சுரங்கப்பாதை இருக்கின்றது. அந்தப்பாதை மூலம் நீங்கள் எல்லோரும் தப்பிவிட வேண்டும்." என்று பணிவுடனும் அன்புடனும் கூறினான்.



இந்தச் செய்தியினைக் கூறிய அந்தத் தொழிலாளிக்கு வீமன் பொன்னும்பொருளும் வெகுமதியாகக் கொடுத்து அனுப்பினான். அதன் பின் முள்ளின் மேல் நிற்பது போல நிதானமாக மாளிகையில் வீமன் சகோதரரோடு வாழ்ந்து வந்தான். மந்திரி புரோசனனும் அவர்களுக்கு நல்ல மந்திரியாக இருப்பது போல நடித்துக் கொண்டு தீ வைப்பதற்கேற்ற தருணத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

— தொடரும். —

## அரசனின் சொத்து



மராட்டிய மன்னனான சிவாஜியை உங்களில் சிலர் அறிந்திருப்பீர்கள். ஆனால் நடிகர் திலகம் சிவாஜி கணேசனைப் பற்றி எல்லோருமே அறிந்திருப்பீர்கள். மராட்டிய அரசனான சிவாஜியின் கதாபாத்திரத்தில் திறமையாக நடித்ததனால் கணேசன் என்ற பெயருக்கு முன்னால் சிவாஜி என்ற பெயரையும் சுமந்து இன்று வரை கணேசன் என்பது மறைந்து சிவாஜி என்ற பெயரையே நிலையாக்கிக் கொண்டவர் சிவாஜிகணேசன் அவர்கள்.

அந்த மராட்டிய மன்னர் மாவீரர் சிவாஜி கருணை உள்ளம் கொண்டவர். அவருடைய கருணையும், வீரமும் இந்தியச் சரித்திர வரலாற்றில் முக்கிய இடத்தை

வகிக்கிறது. அவர் வரலாற்றில் நடந்த சிறு சம்பவம் இது.

சிவாஜி மன்னரின் குருவின் பெயர் தாதாஜி கொண்டதேவ். அவர் சிறந்த ஞானி. அரண்மனையில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு இருந்தது. அரண்மனை நந்தவனத்தில் உலாவிக் கொண்டிருந்த தாதாஜி மாமரத்தின் பக்கமாக வந்து கொண்டிருந்தார். மரத்திலே நன்றாகப் பழுத்த மாம்பழம் கண்ணில் பட்டது. அதன் சுவை எப்படியிருக்கும் என்ற நினைவே அவர் நாக்கில் நீரூற வைத்தது. கைக்கெட்டிய தூரத்தில் மாம்பழம் இருந்ததால் பறித்தார்.

பழத்தை யாருக்கும் தெரியாமல் பறித்து விட்டது அவருக்குத் தவறாகப் பட்டது. அரசனின் சொத்தை அரசனே அறியாமல் திருடுவது அரச குற்றமல்லவா? அவருக்குத் தான் செய்தது திருட்டாகவே தெரிந்தது. அந்தத் திருட்டுக்கு எப்படியும் தண்டனை பெற்றேயாக வேண்டுமென்று அவர் மனதில் தோன்றியது. அரசனிடமே சென்றார். தான் செய்தவற்றைச் சொல்லி, தனக்கு அதற்குரிய தண்டனையைத் தர வேண்டும் என்று மன்னனிடம் கேட்டுக் கொண்டார்.

அப்போது சிவாஜி "நீங்கள் செய்தது குற்றமில்லைக் குருஜி. எனது பொருளெல்லாம் உங்கள் பொருள் தான்.

எந்தப் பொருளையும் உங்கள் விருப்பப்படி தொடவோ அனுபவிக்கவோ என் அரண்மனையில் உங்களுக்கு உரிமை உண்டு." என்று சிரித்துக் கொண்டு சொன்னார். தாதாஜியோ தனக்குத் தண்டனை தந்தே தீர வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார். மன்னர் சிரித்துக் கொண்டே குருஜியை வணங்கி விட்டுச் சென்று கொண்டிருந்தார்.

சென்று கொண்டிருந்த மன்னரைக் குருஜி இடை மறித்தார். "அரசே, நீ எனக்குத் தண்டனை தரப் போவதில்லை. நானே எனக்குத் தண்டனை பெற்றுக் கொள்கிறேன். இன்று முதல் பழத்தைப் பறித்த கையை எதற்குமே உபயோகப்படுத்தப் போவதில்லை. இது உன் மேல் ஆணை மன்னா!" என்று சபதம் செய்தார். அன்று முதல் மாம்பழத்தைப் பறித்த வலக்கையை அவர் உபயோகப்படுத்தவே இல்லை.

அரசருக்கு வித்தை கற்பித்த குருவே அரசரிடம் இவ்வளவு மதிப்பும், அன்பும் கொண்டிருந்தார் என்றால், குடிமக்கள் அரசரின் மேல் எவ்வளவு அன்பும் மதிப்பும் கொண்டிருப்பார்கள் என்பது சொல்லியா தெரிய வேண்டும்!.

"தெரிந்தாலொழியப் பேசக் கூடாது என்று ஒவ்வொரு மனிதனும் தீர்மானிப்பானானால் உலகில் பரிபூரண அமைதி நிலவும்.

— ஹெர்பர்ட் –

## சொற்களைக் கண்டு பிடியுங்கள்

இட — வல:

சுந்தரம், தரம், பாட்டு, ரம்பா, உச்சி, சினம், பட்சி, படி, காட்சி, சிலம்பு, புஜம், ரகம், துவர், அவமானம், மானம், குமரன், மஞ்சள், தளி(அறி,கோயில்), சந்தி, சந்திரன், துடி, சுதி, திண்(வலிமை), திண்மம், குதி, குதிரை, திரை, மது, தும்மல், மல்(வலிமை)

வல — இட:

தட்டு, உமை, சில்லு, தட்டி, பரு, வது(மணமகள்), அப்பம், வடி, வடிவு, மண், மாறி, புனல்(மலையருவி), மரை.

மே — கீ:

சுமை, எள், குற்றி, உபகாரம், காரம், சமா, சமாதி, துரை, ரசி, அமரன், பல், புது, சடுதி, சிரம், தடி, தங்கம், கம்பு, புள்(பறவை), புள்ளி, வம்பு.

கீ — மே:

குறி, குறள், எரு, எருமை, சமம், கட்டி, தின், தனம், வலம், மதி, சிட்டு, வளி.

ஒன்றுக்கு மேல் வந்த சொற்கள்

பா(பாட்டு) கா(சோலை), மா(பெரிய,குதிரை), மை(கறை), மாது, மடி

எழுதியவர்கள்

1. முகுந்தன் மகேந்திரன்
2. மஞ்சுளா சிவசம்பு
3. கௌரிசங்கர் சரவணபவன்
4. தர்சன் சரவணபணன்
5. அபிராமி பரமேஸ்வரன்
6. விஜிதா விநாயகமூர்த்தி
7. நவலக்ஷ்மி
8. விசிகரன் விநாயகமூர்த்தி
9. சிவகரன் விநாயகமூர்த்தி
10. மோகன் இரத்தினசபாபதி
11. ஜெயமாலா இரத்தினசபாபதி
12. ஜெயதீபா இரத்தினசபாபதி
13. சர்மிளா விவேகானந்தன்
14. ஜெயசாந் மனோரஞ்சிதராஜா
15. கிரிசாந் மனோரஞ்சிதராஜா

இம்முறைக்கான சொற்களைக் கண்டு பிடியுங்கள் பகுதியில் பரிசைப் பெற்றுக் கொள்பவர் மஞ்சுளா சிவசம்பு.

நம்மைச் சுற்றி உள்ளவர்கள் நல்லவர்கள், யோக்கியமானவர்கள் என்று நாம் உண்மையாகவே எண்ணினால் அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் கெட்டவர்கள், ஏமாற்றுக்காரர்கள் என்று எண்ணினால் அவர்கள் கெட்டவர்களாகவே இருப்பார்கள். எண்ணங்களுக்கு அவ்வளவுக்கு சக்தி உண்டு. அதனால் தான் நாம் எல்லோரும் நல்லதையே நினைக்க வேண்டும்.

S.A.P

# திருடனுக்கு உபதேசம்



காந்திதாசர் என்னும் செல்வந்தர் அந்த ஊரில் மிகவும் பிரபல்யம் உள்ளவராக இருந்தார். அவர் பிரபல்யம் ஆவதற்கு பணம் மட்டும் காரணமில்லை. அவர் சிறந்த கல்விமானாக இருந்தார். எல்லோரையுமே சமனான தன்மையிலேயே கணித்துக் கொள்வார். இதனால் அவரை எல்லோரும் மதித்தனர்.

ஒருநாள் இரவு அவர் வீட்டில் திருடன் ஒருவன் திருட வந்தான். விலைமதிப்புள்ள வீட்டுச் சாமான்களைத் திருடிக் கொண்டு புறப்பட்ட வேளையில் அவன் கையும்மெய்யுமாகப் பிடிபட்டான். காந்திதாசர் அவனை அன்போடு பார்த்தார். பின் அவனிடம், "ஏன் இந்தக் கெட்ட பழக்கத்துக்கு

ஆளானாய்?" என்று விசாரித்தார்.

அதற்கு அவன், "ஐயா, என் குடும்பம் வறுமையால் கஷ்டப்படுகின்றது. அதனாலேயே நான் திருட முயன்றேன்." என்று கூறினான். அதற்குக் காந்திதாசர் ஒன்றுமே பேசவில்லை. அவனை அருகில் அழைத்துப் பக்கத்தில் இருத்திக் கொண்டார். பின்பு அவனிடம், "நான் உனக்கொரு விஷயம் சொல்கிறேன். கவனமாகக் கேள்.

கடலுக்குள் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்கள் எப்படித் தாகம் ஏற்பட்டாலும் கடல்நீரை குடிப்பதில்லை என்பது உனக்குத் தெரிந்திருக்கும். ஏன் என்று சொல் பார்க்கலாம்?". என்றார். "கடல்நீர் உப்புத் தன்மையானது. அதை எப்படிக் குடிப்பது?" என்றான் திருடன். காந்திதாசர் "கலகல" என்று சிரித்தார்.

பின்பு அவனைப் பார்த்து, "அது மட்டும் காரணமில்லை. தம்பி, உப்புநீரினால் தொண்டையில் வரட்சி ஏற்படும். மேலும் மேலும் தாகம் ஏற்படுமே தவிரக் குறையாது. அது போலத் தான் திருட்டும். இன்று வறுமையின் காரணமாகத் திருடுவாய். வறுமை மாறியதும் விட்டு விடுவாயா? இல்லை. மீண்டும் திருடுவாய். இது திருட்டின் குணம். இதை

விட்டு விடு. நீ என் வீட்டில் வேலை செய். உனக்கு நான் நிறையப் பணம் தரப்போவதில்லை. உன் உழைப்புக்கேற்ற ஊதியம் தருவேன். அது உன் குடும்பத்தை வசதியாக வாழ வைக்கும் என்பதில்லை. உன் குடும்பத்து வறுமையைப் போக்கும்." என்றார்.

காந்திதாசரின் நல்ல குணத்தைக் கண்டு திருடன் வியந்தான். அவரின் வீட்டிலேயே வேலைக்குச் சேர்ந்து கொண்டான்.

கதை, கட்டுரைகள், பாடல்களை எழுதுபவர்கள் அதை எதிலிருந்து பெற்றீர்கள்?. எதிலிருந்து மொழி பெயர்த்து எழுதுகிறீர்கள்?. உங்கள் சொந்தக் கற்பனையில் எழுதுகிறீர்களா?. என்பதையும், உங்களின் வயது, எத்தனையாவது வகுப்பில் படிக்கிறீர்கள்? என்பதையும் எழுதுங்கள். உங்களுக்கான பரிசுப் புத்தகம் வழங்குவதற்கு உதவியாக இருக்கும்.

உங்களின் கைப்பட எழுதிய பிரதிகளைச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பார்வையிடுவதுண்டு. அந்த வேளையில் உங்களைப் பற்றி விசாரிப்பார்கள். அவ்வேளைகளில் எங்களுக்கு உதவியாக இருக்கும். அது மட்டுமல்லாமல் சிறுவர் அமுதம் புத்தகம் எங்கள் நாடாகிய இலங்கைக்கும் இந்தியாவுக்கும் கூடச் செல்லுகிறது. உங்களின் பெருமை அங்கும் செல்லட்டுமே!

## கௌரவம்



நரி அழகானது தான். ஆனாலும் அதனோடு யாரும் நட்பாக இருப்பதில்லை. அது நரிக்குக் கவலையாக இருந்தது. தன்னை எல்லா மிருகங்களும் கௌரவத்துடன் நடத்த வேண்டுமென்று நரி விரும்பியது. அதற்காகப் பல விதத்திலும் முயற்சி செய்தது. அதனால் பயன் ஏதும் ஏற்படவில்லை. அப்போது எதிரே சிங்கம் வந்தது. சிங்கத்துக்கு வணக்கம் சொல்லி விட்டு அப்பால் சென்றது நரி.

நரிக்குத் திடீரென்று யோசனை வந்தது. "நான் என்ன காகமா?, பருந்தா? நாலு கால் கொண்ட மிருகம் தானே!. சிங்கமும் நாலு கால் கொண்ட மிருகம் தானே!. என்னை விடவும் பெரியது. பலம் கொண்டது. நான் சின்னவன்.

என் உடம்புக்கேற்ற பலம் எனக்கிருக்கிறது தானே?" என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டது.

சிங்கத்தை எப்படியாவது சந்திப்பது என்று நரி தீர்மானித்துக் கொண்டது. ஒருநாள் சிங்கம் சுகமில்லாத காரணத்தால் வெளியே வர முடியுவில்லை. அதைக் காரணமாகக் கொண்டு நரி சிங்கத்திடம் வந்தது. "ஏதோ சுகமில்லைப் போல இருக்கிறது. குகைக்குள்ளேயே இருக்கிறீர்களே!" என்று கேட்டது. சிங்கமும் முனகிக் கொண்டே, "சுகமில்லைத் தான். ஆனால் பசிக்கிறது. வேட்டையாட முடியவில்லை." என்றது.

"இதோ! ஒரு நொடியில் வந்து விடுகின்றேன்." என்று கூறி விட்டு வெளியே வந்து சிறு ஆடொன்றை வேட்டையாடிக் கொண்டு வந்து கொடுத்தது. "இதற்காக உனக்கு எவ்வளவு கூலி தர வேண்டும்?." என்று சிங்கம் நரியிடம் கேட்டது. "வெறும் கூலிக்காகவா இதைச் செய்தேன்!. உங்களுடன் கூட இருந்து, உங்களுக்கு உதவி செய்யும் நண்பனாக இருக்கப் பிரியப் படுகின்றேன்." என்றது நரி. சிங்கம் தான் கேட்பதை மறுத்து விடக் கூடாதே என்ற நினைவோடு மிகவும் இதமாகவும் பணிவாகவும் பேசிக் கொண்டது.

சிங்கமும் அதை ஆமோதித்தது. அதன் பின் சிங்கம் வேட்டைக்குச் செல்லும் வேளைகளில் எல்லாம் நரி சிங்கத்துடன் சென்றது. சிங்கம் வெளியே வரும் வேளையில், மற்ற மிருகங்கள் ஓடி ஒளிந்து விடும். இதைப் பார்த்ததும் சிங்கத்தை விடவும் நரிக்குப்

பெருமிதமாக இருக்கும். மிருகங்கள் தனக்கு மரியாதை செய்வதாக நரி எண்ணிக் கொள்ளும்.

நேராக எதிர்ப்படும் மிருகங்கள் தலை தாழ்த்திப் பணிந்து போவதைப் பார்த்து நரி ஆனந்தப்படும். ஒருநாள் வெகு நேரமாகியும் எந்த மிருகமும் கண்ணில் தென்படவில்லை. நரிக்கும் சிங்கத்துக்கும் நன்றாகப் பசித்தது. கலைமான் ஒன்று கண்ணுக்குத் தென்பட்டது. தந்திரமாக அதனுடன் பேச்சுக் கொடுத்துக் கொண்டே நரி சிங்கத்திடம் அதனை அழைத்து வந்தது. சிங்கம் கலைமானை அடித்துக் கொன்றது.

கலைமானைச் சிங்கம் பங்கு பிரித்தது. அதைப் பார்த்த நரி தன் பசிக்காகவும் சிங்கம் பங்கு போடுகின்றது என்று மனதில் ஆனந்தப் பட்டது. நான்காகப் பங்கு போடப்பட்ட இறைச்சியை "இது அரசனுக்கான காணிக்கை." என்று ஒரு பங்கை ஒதுக்கியது. நரி வாலைச் சுருட்டிக் கொண்டு உட்காந்தது. இரண்டாவதாக ஒரு பங்கைச் சுட்டிக் காட்டி "இது என் தேகபலத்திற்கு" என்று சொன்னது. மூன்றாவது பங்கு தன் கம்பீரத்துக்கு என்று கூறியது.

நரி இப்போது நிமிர்ந்தே இருந்து கொண்டது. சிங்கம் நரியைப் பார்த்து, "உன் நட்பிற்காக எனக்குத் தரும் காணிக்கை" என்று நான்காவதைச் சொன்னது. நரிக்குத் தூக்கிவாரிப் போட்டது. "அப்போ எனக்கில்லையா?" நரி கேட்டது. சிங்கம் "நான் யாரென்று தெரியுமல்லவா?" என்று கர்ச்சித்தது சிங்கம். "ஆனாலும் எனக்கும்



அம்மா தேவையான சாமான்களை எழுதிக் கொடுத்து விடுவாள். அன்றும் அம்மா எழுதிக் கொடுத்த குறிப்பையும் கொண்டு, மளிகைக்கடைக்குள் நுழைந்தான். கடைக்குள் அன்று சனக்கூட்டமாக இருந்தது. எப்படியாவது பச்சரிசி வாங்கி வரும்படி அம்மா சொல்லியிருந்தாள். வாங்காமல் திரும்பவும் முடியாது.

ஒருவாறு முக்கால் மணித்தியாலம் கால் வலிக்க நின்று சாமான்களை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு வந்து அம்மாவிடம் கொடுத்து விட்டு, அம்மா கொடுத்த சிற்றுாண்டியையும், தேநீரையும் அருந்திக் கொண்டிருந்தான். சாமான்களை அடுக்கிக் கொண்டிருந்த அம்மா, "மாதவா, பச்சரிசி இரண்டு கிலோ தானே வாங்கி வரச் சொன்னேன். ஆறு கிலோ இருக்கின்றதே!" என்றாள்.

"நீங்கள் எழுதிக் கொடுத்திருந்தபடியேதான் வாங்கி வந்தேன்." என்று சொல்லிக் கொண்டே அம்மாவிடம் மாதவன் வந்தான். அம்மா அவனிடம், "கடை

பூட்டியிருக்காது தானே?. இதை உடனேயே கடைக்குக் கொண்டு சென்று சேர்த்து விடு. ஊரார் சொத்து எனக்கெதற்கு? கொடுத்து விட்டு இரண்டு கிலோ வாங்கி வா." சொல்லிக் கொண்டே பச்சரிசிப் பையை மாதவனிடம் கொடுத்தாள்.

"வேண்டாம். உள்ளே வையுங்கள்! அம்மா." என்ற மாதவனை அம்மா வியப்போடு பார்த்தாள். யாருடைய பொருளுக்கும் ஆசைப்படுவதோ, யாரையும் பார்த்துப் பொறாமைப் படுவதோ மாதவனிடம் கிடையாது. ஏன்? இதற்கு இப்படிப் பேசுகின்றான்?. அம்மா ஒன்றுமே பேசவில்லை. மகன் குணம் மாறி விட்டானா!

அடுத்த மாதம் சாமான்கள் மளிகைக் கடையில் வாங்கிக் கொண்டு வந்தான் மாதவன். அம்மா கொண்டு வந்த கணக்கைச் சரி பார்த்தாள். பச்சரிசி என்று எழுதிக் கணக்குப் போடப்பட்டிருந்தது. அம்மா மாதவனிடம், "பச்சரிசி வாங்கி வரும்படி நான் எழுதவில்லையே!. பச்சரிசி வாங்கினாயா? இங்கு பச்சரிசியைக் காணவில்லையே? உனக்கென்ன ஞாபகமறதி!" என்று கேட்டாள்.

"எனக்கொன்றும் ஞாபகமறதி இல்லை அம்மா. சென்றமுறை பச்சரிசி கூடுதலாக வாங்கி வந்தேன் அல்லவா? அதற்காக அதைக் கணக்கில் சேர்க்கும்படி கடை முதலாளியிடம் சொன்னேன். அதுதான் நடந்தது." என்று சொன்னான் மாதவன். "அன்றைக்கே அதைக் கொண்டு சென்று கொடு,

என்றேனே! இன்றைக்குக் கொடுத்ததை அன்றே கொடுத்திருக்கலாம், அல்லவா?" என்று கேட்டாள் அம்மா.

அதற்கு மாதவன் அம்மாவைப் பார்த்து, "அன்றைக்கே கொடுத்திருக்கலாம் தான். அன்றைக்கே கொடுத்திருந்தால், பச்சரிசி தந்த வேலையாளுக்குக் கவனக் குறைவாக நடந்ததற்காக முதலாளி கோபித்திருப்பார் அல்லது வேலையை விட்டு நீக்கியிருப்பார். அதை இன்று அறியும்போது முதலாளிக்கு யார் என்று விசாரிக்கும் நிலை இல்லை, அல்லவா? வீணாக ஒரு ஏழை வேலையாள் அவமானப்பட மாட்டான், அல்லவா?" என்றான் மாதவன்.

தன் மகனின் பெருந்தன்மை இருந்ததை விடவும் ஒருபடி கூடி இருப்பதை நினைத்துப் பெருமைப்பட்டாள் அம்மா.

— பாமினி அருள்வரதன் —

அறிவுலக மேதையான பெர்னாட்ஷா சைவ உணவுக்காரர் என்பது ஆச்சரியமில்லை. இரண்டாம் உலக யுத்தத்தின் காரணகர்த்தாவான ஹிட்லரும் சைவ உணவுக்காரர் தான்.

தெரியுமா?

இந்தியாவின் ஆஸ்கார் விருது பெற்ற முதல் பெண்மணி என்ற பெருமையைப் பெற்றவர் பானு அதையா. ஹிந்திப் படவுலகில் உடைகளை விதம் விதமாக வடிவமைத்துப் புகழ் பெற்ற இவர் காந்தி(மகாத்மாகாந்தி) ஆங்கிலப் படத்தில் உடைகளை வடிவமைத்தமைக்காக ஆஸ்கார் பரிசினைப் பெற்றுக் கொண்டார்.

ஆங்கிலமொழியில் உள்ள உயிர்மெய் எழுத்துக்கள் (யு நு ஐ ழு ரு) . இந்த ஐந்து எழுத்துக்களையும் ஆஸ்திரிய மன்னனான மூன்றாம் பிரடெறிக், தனது உடைகள், தான் பாவிக்கும் பொருட்கள், படுக்கை எல்லாவற்றிலும் பொறித்திருந்தார். தன் கல்லறையில் கூட இந்த ஐந்து எழுத்துக்களையும் பொறிக்க வேண்டும் என்றும் மன்னர் சொல்லியிருந்தாராம். இதை ஆஸ்திரிய மன்னர் ஏன் விரும்பினார்?. (யுரளவசயை நுளவ ஐஅிநசரைஅ ழுசடிரள ருனைநசளந) — ஆஸ்திரியா தான் உலகிலேயே அரசு செலுத்தும் நாடு என்பதன் சுருக்கம் அது என்கிறார்கள்.

தாய்லாந்து நாட்டில் மாசி மாதம் — குநடிசரயசல முதல் தேதியைக் காற்றாடி விடும் நாளாகக் கொண்டாடுகிறார்கள். அன்று அரசாங்க விடுமுறை தினம். ஆகாயத்தில் பிரமாண்டமான, பல வண்ணக் காற்றாடிகளைச் செய்து பறக்க விடுவது தாய்லாந்து

நாட்டினருக்கு மிகவும் விருப்பமான பொழுதுபோக்கு.


ந வௌவால் பறக்கும் பிராணி என்பது எல்லோருக்கும் தெரியும். உலகிலே கிட்டத்தட்ட 2000 வௌவால் இனங்கள் இருக்கின்றன. இவற்றில் ஒன்று இரத்தத்தை உணவாக உண்கின்றது. இவை இரத்தத்தைத் தவிர வேறெதையும் உண்பதில்லை. இவை கடித்தால் கடிக்கப்படும் மிருகத்துக்கு அல்லது மனிதனுக்கு வலியே தெரியாது. இவை வலிக்காமல் உடம்பில் துளை உண்டாக்கி 'தன் உணவை உட்கொள்ளும் விதம் ஆச்சரியமானதே!

மணிக்கூடுகள், கைக்கடிகாரங்கள் இவற்றின் விளம்பரங்களைப் பார்த்திருப்பீர்கள். இதில் எல்லாக் கடிகாரங்களிலும், நேரம் ஒரே நேரமாகத்தான் இருக்கும். இது என்ன அழகுக்காகவா அப்படி வைத்திருக்கிறார்கள். அது தான் இல்லை. அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம்லிங்கன் சுடப்பட்ட நேரம் அது. (10மணி.10நிமி) ர ஷ்யாவில் குழந்தைகளுக்காக என்று 28 பத்திரிகைகள் வெளியாகின்றன. 85 லட்சம் பிரதிகள் விற்பனையாகின்றன.

பங்களாதேஷ் நகரத் தலைநகரான டாக்காவில் எலிகளின் தொல்லை கூடுதல் இடத்தைப் பிடிக்கிறது. இதனால் எலிகளை அதிகமாகக் கொல்பவர்களுக்கு அரசாங்கத்தால் வானொலிப் பெட்டி பரிசாகக் கொடுக்கிறார்கள்.

# புத்திசாலி

பகீரதன் பலசரக்குக் கடை வைத்திருந்தான். அவனுடைய கடைக்கு எதிரிலேயே தன் தம்பியான பார்த்திபனுக்கும் பலசரக்குக்கடை வைத்துக் கொடுத்திருந்தான். இருவரும் பாசம் கொண்ட சகோதரர்களாக இருந்தார்கள். இருவருமே அயல் கிராமத்தில் திருமணம் புரிந்தார்கள். பகீரதனின் மனைவியின் குடும்பமும், பார்த்திபனின் மனைவியின் குடும்பமும் ஏட்டிக்குப்போட்டியான குடும்பமாக இருந்தன. இதனால் சகோதரர்களின் மனைவிகள் இருவரும் போட்டி பொறாமை உள்ளவர்களாகக் காணப்பட்டார்கள்.



ஆனாலும் அண்ணனும் தம்பியும் அவர்களின் பிரச்சனைகளை அவர்களிடமே விட்டுவிட்டுத் தாங்கள் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்தார்கள். எவ்வளவு நாட்களுக்குத்தான் ஒற்றுமையாக வாழ முடியும்?. பார்த்திபன் இடையிடையே அண்ணனிடம் மனஸ்தாபப்பட்டுக் கொள்வான். பகீரதனும் சமாளித்துக் கொள்வான். வெளியில் அன்பான சகோதரர்கள் என்று பேரெடுத்தவர்கள். இப்போது சண்டையிட்டால் அயலவர்கள் கேலி பேசுவார்கள் என்பதால் அண்ணனும் தம்பியும் ஒற்றுமையாகவே இருப்பதாகவே காட்டிக் கொள்வார்கள்.

வெளியூரில் உள்ள பசுநெய் வியாபாரி ஒருவன் பசுநெய் மலிவாக விற்பதாகப் பகீரதன் அறிந்தான். தம்பியான பார்த்திபனுக்கும் விஷயத்தைக் கூறினான். இருவருமாக நெய் வாங்கி வரக் கிளம்பினார்கள். பகீரதனிடம் பத்து லீற்றர் கொள்ளக் கூடிய பாத்திரம் இருந்தது. பார்த்திபனிடம் பாத்திரம் பெரிதாக இல்லை. அதனால் தன்னிடம் இருந்த ஏழு லீற்றர் கொள்ளக் கூடிய பாத்திரத்தையும், மூன்று லீற்றர் கொள்ளக் கூடிய பாத்திரத்தையும் எடுத்துக் கொண்டான்.

வியாபாரியிடம் நெய் முடியும் தறுவாயில் இருந்தது. வாடிக்கைக்காரர் எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்பதால், கொஞ்சங்கொஞ்சமாக வந்தவர்களுக்குக் கொடுத்து வந்தான். அதனால் அவன் இவர்களைப் பார்த்து "நீங்கள் அண்ணன் தம்பி தானே!. இருவருக்கும்

பொதுவாகப் பத்து லீற்றர் நெய் தருகிறேன்." என்று சொல்லி விட்டு பகீரதனின் பாத்திரத்தில் பத்து லீற்றர் நெய்யை ஊற்றிக் கொடுத்தான். பொது இடமென்ற காரணத்தால் சகோதரர்கள் எதுவுமே பேசாமல் வாங்கிக் கொண்டார்கள்.

வரும் வழியில் இருவருக்கும் வாக்குவாதம் வந்து விட்டது. பார்த்திபன், "அண்ணா சரிபாதியை எனக்கு அளந்து கொடு." என்றான். "உனக்கென்ன விசரா! சரியாகப் பிரிப்பதற்கு நிறுவை இல்லையே. எப்படிப் பிரிப்பது? வீட்டுக்குப் போனதும் பிரித்துக் கொடுக்கிறேன்." என்றான். பார்த்திபன், "அதைப் பற்றி எனக்கொன்றும் தெரியாது. இப்போதே பிரித்துக் கொடுத்து விடு." என்று பிடிவாதமாகக் கூறினான்.

பகீரதன் ஐந்து லீற்றர் நெய்யை அளந்து கொடுத்தான். எப்படி அவன் அளந்து கொடுத்திருப்பான். விடையைக் கண்டு பிடியுங்கள்.

சென்ற முறைக்கான பிழை கதைக்கான விடையை எழுதியவர்கள்

1.தர்சன் சரவணபணன்
2.கௌரிசங்கர் சரவணபவன்
3.அபிராமி பரமேஸ்வரன்
4.கிரிசாந் மனோரஞ்சிதராஜா
5.ஜெயசாந் மனோரஞ்சிதராஜா
6.கிருஷ்ணாளினி ரவீந்திரராஜா

சென்ற மாதத்திற்கான விடையை யாருமே சரியாக எழுதவில்லை. சென்ற மாதத்திற்கான விடை

ரகு அரை மணித்தியாலத்தில் ஒரு மாங்கன்றை நட்டான். தாயார் கால் மணித்தியாலத்தில் ஒரு மாங்கன்றை நட்டார். தாயார் ஒரு மணித்தியாலத்தில் நான்கு கன்று நடுவார். ரகு ஒரு மணித்தியாலத்தில் இரண்டு மாங்கன்று நடுவான். இருவரும் சேர்ந்து ஆறு கன்றுகளை நடுவார்கள். ஆனபடியால் இருவரும் சேர்ந்து ஒரு கன்றை நட பத்து நிமிடம் பிடிக்கும். இரண்டு கன்றையும் நட இருபது நிமிடம் பிடிக்கும்.

விடை எழுதியோரில் அதிட்டசாலியாகிப் பரிசைப் பெற்றுக் கொள்பவர் அபிராமி பரமேஸ்வரன் அவர்கள்.

மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன நினைக்கிறார்களோ என்று நீ நினைக்கத் தொடங்கினால், அவர்கள் உன்னைப் பற்றி நினைக்காததை எல்லாம் நினைப்பதாக எண்ணிக் கொள்ள வேண்டியதாக இருக்கும்.

— மகாத்மாகாந்தி

சொர்க்கம் தாயின் இரு பாதங்களின் அடியில் தான் இருக்கிறது.

— முகமது நபி —

## பகை



பூனை எலிக்குப் பகை பகை!
பூனைக்கு நாயும் பகை பகை!

யானை புலிக்குப் பகை பகை!
யானைக்குச் சிங்கம் பகை பகை!

பாம்பு தவளைக்குப் பகை பகை!
பாம்புக்குக் கீரி பகை பகை!

தேளும் பாச்சையும் பகை பகை!
தேளுக்குப் பல்லி பகை பகை!

இவ்விதமாகப் பாரினிலே
ஒவ்வொன்றுக்கும் வேறு பகை!

ஆறறிவுடைய மனிதனுக்கோ,
அத்தனை உயிரும் பகை பகை!

அத்துடன் இன்னொரு வேடிக்கை!
மனிதனே மனிதனின் பகை! பகை!

அத்தகை,
மனிதனைப் பார்த்து நகை நகை!

— புத்தனேரி சுப்பிரமணியம் —

# சொற்களைக் கண்டு பிடியுங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கு | ண் | ண | ன் | ஜெ | ஸ் | து | ம் | ர | ம |
| று | ம | ன் | னி | ட் | கு | ங் | ச | த | னி |
| ப் | ளை | சி | ச் | ப | சை | தை | ய | ம் | று |
| பு | த | ன் | தி | ந் | லெ | சி | றி | ரு | னை |
| கை | ம் | பெ | ண் | த | வி | ளை | று | வ | ம் |
| வ | பி | த் | தி | ம் | நா | டி | ம் | ண | யா |
| ண் | டி | பா | ல | கு | ன் | ட் | ப | ம் | று |
| டி | ண் | ச | ம் | ட | தெ | ப | றி | கு | ன் |
| ட் | ர | ம் | ப | ம் | வ | சு | ரை | க் | னா |
| க | ப | ட | ம் | கு | ளை | மை | று | றி | பு |

5.10.98

*Nektar für die Kinder*

*Nectar pour les enfants*

*Nectar for the childrens*



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்


"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527